**களணி பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களணி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெறுமதி, சொத்துக்களின் தன்மை மற்றும் ஆயுட்காலம் என்பவற்றின் பிரகாரம் அது நிலையான சொத்தொன்றாக இனங்காணப்படாமல் மிகவும் சிறிய பெறுமதி மற்றும் மீண்டும் விற்பனை செய்து பணமாக்க முடியாத குறுகிய ஆயுட்காலத்துடனான விடயங்கள் நிலையான சொத்துக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐந்து (05) சிங்கர் தையல் இயந்திரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிரிபத்கொட தள வைத்தியசாலையின் நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 187,965 தொகை மற்றும் தொறன சந்தி பன்றி இறைச்சிக்கடையின் பிழையான நிலுவைத் தொகையான ரூபா 78,496 தொகை 2017 திசெம்பர் 27 ஆந் திகதிய 4436 ஆம் தீர்மான இலக்கத்தில் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அது இறுதிக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 17 சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பௌதீக பரிசோதனையின் பிரகாரம், சபைக்குரிய வாகனத் தளத்தில் காணப்பட்ட 03 உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டி மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றின் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

05 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் மீதியினதும், பயன்பாட்டு பதிவேடுகளின் அறிக்கையின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 410,572,192 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

(அ) முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 1995 முதல் 2000 வரை ரூபா 316,847 தொகை, 2001 முதல் 2005 வரை ரூபா 5,451,644 தொகை மற்றும் 2006 முதல் 2010 வரை ரூபா 2,296,570 தொகையாக கூட்டுமொத்தமாக ரூபா 8,065,961 தொகையான முற்பணக்கொடுப்பனவு மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்ட நிறுத்தி வைத்தல் பணத்தின் கூட்டுப் பெறுமதி ரூபா 242,589 களணி பிரதேச செயலகத்திலிருந்து 2018 யூன் 06 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

தேவையான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 767,600 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப்பிரதேசத்திற்குரிய சகல வீதிகளினதும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பெயர்ப் பதிவேடு வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் சபையின் உரித்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | 47,292 | வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆறு மாதங்களைக் கடந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2015 ஆம் இலக்க மேல் மாகாண பிரதம செயலாளரின் நிதிச் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனத்திற்குச் சொந்தமான உடைந்த மற்றும் பயன்படுத்துவதற்கு முடியாதுள்ள வாகனங்கள் 03 மாத காலத்திற்குள் விற்றுத்தீர்த்து முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்கின் பிரகாரம் பெறுமதி இனங்காண முடியாத சபைக்குச் சொந்தமான பலவருட காலம் பழைமையான 02 வாகனங்கள் விற்றுத் தீர்க்கப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. |

### 1.3.7 போதியளவான அதிகாரப்பலத்தினால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

2017 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதிஏற்பாட்டைப் ஒதுக்காமலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமலும் மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமலும், சபையின் பதவியணியினருக்குரிய 153 பிள்ளைகளுக்காக ‘‘நெண கிறண’’ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 446,128 பெறுமதியான பாடசாலை உபகணரத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டு வரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 68,430,011 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 66,267,217 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) சபையின் நிதியம் சபை அதிகாரப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு ஆகக்கூடிய நலன்களைப் பெறக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு செலவிடுதல் சபையின் நோக்கம் மற்றும் இலக்குகளாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான ரூபா 11 மில்லியன் தொகையொன்று மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றில் 02 நிலையான வைப்புக்களில் எதிர்பார்த்த திட்டமொன்று இன்றி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை வங்கியின் 0000513466 இலக்க நடைமுறைக் கணக்கில் 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 614,678 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதியொன்றும், இனங்காணப்படாத ரூபா 562,962 தொகையான மறை செலவு மீதியொன்றும் காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 53,550,000 | 54,958,058 | 62,275,053 | 25,212,920 | 63,600,000 | 72,347,775 | 79,632,073 | 32,529,916 |
| வாடகை | 19,717,347 | 22,671,017 | 23,325,061 | 5,127,727 | 19,047,220 | 18,398,880 | 19,396,821 | 5,781,771 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,552,500 | 1,829,128 | 1,829,128 | 359,566 | 2,202,500 | 1,764,596 | 1,764,596 | 359,556 |
| ஏனைய வருமானம் | 127,765,500 | 93,240,090 | 93,252,090 | - | 138,905,000 | 99,680,040 | 99,680,040 | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 200.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 180.6 மில்லியன் வரை ரூபா 19.8 சதவீதத்தால் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவு குறைவடைந்திருந்தது. இந்த குறைவிற்கு பிரதான காரணமாகத் கைத்தொழில்வரி குறைவடைந்தமை, ஏனைய வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முத்திரை வருமானம் குறைவடைந்தமை மற்றும் சேவைகளுக்கான கட்டணங்களின் பெறுவனவுகள் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தன.

### 2.3.3 வீதவரியும் வரியும்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 25,778,228 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை ரூபா 1,028,442 தொகை மற்றும் 01 வருடத்திற்குக் குறைவான ரூபா 24,749,786 தொகை என்பன உள்ளடங்கி இருந்ததுடன் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனியார் நிறுவனமொன்றில் இருந்து 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 767,028 தொகையில் 2018 சனவரி 03 ஆந் திகதி ரூபா ஒரு இலட்சம் அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவை மீதியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் விருந்தினர் விடுதி ஒன்றிலிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 261,414 தொகையான நிலுவை ஆதனவரி மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

(அ) கிரிபத்கொடை வடக்கு எல்லையில் கடை ஒன்றிற்காக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 1,064,861 ஆக இருந்ததுடன் இந்த நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான எழுத்துமூல உடன்படிக்கை காணப்படாதிருந்தமை தடையாக இருந்தது.

(ஆ) 5 - 10 வருடங்களுக்கான காணி மற்றும் கட்டங்களின் வாடகை நிலுவைப் பணம் ரூபா 281,330 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 ஏனைய வருமானம்**

**(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மர ஆலைகள் இயந்திர மயப்படுத்தப்பட்ட தச்சு வேலைத்தளம், ஓய்வு விடுதிகள், எரிபொருள் நிரப்பும் நிலையம், அரைக்கும் ஆலைகள், அச்சகங்கள், எண்ணெய் ஆலைகள், மற்றும் விழா மண்டபங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய வியாபார நிறுவனங்கள் என்பன கட்டாயமாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டி இருந்த போதிலும், அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 20 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்த பிரதேசமொன்று ஏற்படுமாயின் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் உருவாகும் போக்கு அதிகரிக்கும் வகையில் பெறவேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திர அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) செல்லுபடி காலத்தை விஞ்சுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலம் முடிவடைந்த மூன்று நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு 2018 யூன் 06 ஆந் திகதி வரையிலும் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) அறிவித்தல் பதாதை வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகள் மற்றும் 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) அதிகாரச்சட்டத்தில் விளம்பர அறிவித்தல் தொடர்பான உபவிதியின் 01 ஆம் பட்டோலையில் அறவிட வேண்டிய கட்டணத்தின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் உள்ள சகல அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 87 அறிவித்தல் பாதாதைகளிலிருந்து மாத்திரம் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**(இ) தொலைபேசி கோபுர வருமானம்**

(i) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபை அதிகாரப்பிரதேசத்திற்குரிய தொலைபேசி கோபுரங்கள் யாவும் இனங்கண்டு 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் V பட்டோலைகளின் V ஆம் பிரிவின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் களணி

சபை அதிகாரப்பிரசேத்தில் 07 கோபுரங்களிலிருந்து மாத்திரம் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தொலைபேசிக் கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள போட்டி மாற்றல் உபகரணங்களுக்குரிய நிறுவனங்களில் இருந்து வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 97,073 தொகையான கோபுர வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.6 முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் 06 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 108 மில்லியனாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேசசபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 51 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 48 விடயங்களுக்குரிய மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 07 பணிகளை அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது.

**(இ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட பல்வேறு இலக்குகளில் 10 இனை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,485,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணத்தை செலவிட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

(i) ரூபா 27.98 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட களணி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 41 கடைகள் 2011 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகளிலிருந்து சபைக்கு எந்தவித நலனும் கிடைத்திருக்கவில்லை. அந்தக் காணியின் உரித்தும் இதுவரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் சபை அக்கட்டிடத்திற்காக செலவிட்ட கிரயமும் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ii) ஹுணுப்பிட்டிய புதிய சந்தைத் தொகுதியின் 03 கடைகள் 2011 ஆம் ஆண்டு முதல் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமல் காணப்பட்டது.

**(உ) கைவிடப்பட்ட இலக்குகள்**

மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டிய 04 இலக்குகளுக்காக ரூபா 571,620 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த விளைவுகள் பெற்றுக்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

**(ஊ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் கழிவுகளை அகற்றுவதற்காக மூலதன செலவினம் எதுவும் செலவிடப்படாதிருந்ததுடன் வருமான செலவினமான மீளாய்வாண்டின் போது ரூபா 17 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதாவது,

(i) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/06 ஆம் இலக்க வர்த்தமானியின் 18(1) இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டில் கழிவுப்பொருட்களை வீட்டுக்கு வீடு சேகரிக்கும் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட வர்த்தமானி 2011 யூலை 05 ஆந் திகதிய 1713/11 ஆம் இலக்க வர்த்தமானி மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி என்பவற்றின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி அல்லது கட்டணம் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மானெல்கம கழிவுப்பொருள் தளத்தில் நாளொன்றுக்கு 09 தொன் கூட்டுப்பசளை உற்பத்தி செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் உக்காத கழிவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டமையினால் கூட்டுப்பசளை தயாரிக்கும் அளவு 1 ½ தொன் வரை குறைவடைந்திருந்தது.

**(எ) சுற்றாடல் பிரச்சினைகள்**

அதிகாரப்பிரசேத்தில் கைத்தொழில்களிலிருந்து சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பான 05 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு நியாயமான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. தொறண சந்தி, பொசொன்வத்த வீதி, டீறானந்த பிரிவென அருகில், கால சந்தி, சிலிகொன் இன்ஜினீயர்ஸ் நிறுவனம் என்பவற்றுக்கு முன்னால் கழிவுகள் போடப்படுகின்றமை தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகள் சமர்ப்பித்திருந்ததுடன் அப்பிரச்சினை தொடர்பான சபை கவனம் செலுத்தியிருந்த போதும், தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பான சபை அறிந்திராமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் 2018 யூன் 06 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

சபையின் விழா மண்டபத்தை வாடகைக்கு வழங்கியமையால் வாடகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 1,008,714 ஆக இருந்ததுடன் 2018 யூன் 06 ஆந் திகதி வரையிலும் வழக்குத் தீர்ப்பின் நியதிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 02 | - | - |
| மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| இரண்டாம் நிலை | 48 | 47 | 01 | 01 |
| ஆரம்ப நிலை | 207 | 194 | 13 | - |
| அமைய / நாட்கூலி / ஒப்பந்த | - | 28 | - | - |
| தற்காலிக அடிப்படை | - | 22 | - | - |
| மொத்தம் | 258 | 293 | 15 | 01 |

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நூலகப் பதிவியொன்று, வருமானப் பரிசோதகர் பதவியொன்று, முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவியொன்று அலுவலக உதவியாளர் பதவி, காவலர் பதவி, நூலக உதவியாளர் பதவி, சுடலைக்கூட செயற்படுத்துனர் பதவி 05 வேலைக்கள தொழிலாளர் மற்றும் சுகாதாரத் தொழிலாளர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று மிகையாகக் காணப்பட்டது.

(இ) சபையின் பொது சுகாதார பரிசோதகர் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் பதவிக்காக 2017 ஏப்ரல் 03 ஆந் திகதி முதல் சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்தார்.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

**ஆதனவரி / ஆதனங்களின் மதிப்பீடு காலரீதியில் இடம்பெறாமை**

1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 434 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது சபைக்குரிய மூன்று உப அலுவலகங்களினதும் ஆதனங்கள் 2008 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு 09 வருடங்கள் அளவில் கடந்திருந்த போதிலும், ஆதனங்களின் தற்போதைய பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மீள்திருத்தம் செய்வதற்கு சபை தவறியமையால் சபை அதிகாரப்பிரதேசத்தில் 43,951 ஆதன அலகுகளிலிருந்து அறவிடக்கூடிய நாளதுவரையாக்கப்பட்ட வரி அளவை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை**

(அ) நிதிக்கூற்றுக்களில் 48 குப்பை வண்டிகள் / கை வண்டிகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக சொத்துப் பரிசோதனையின் போதிலும், 17 குப்பை வண்டிகள் / கை வண்டிகள் மாத்திரமே காணப்பட்டன.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது, இனங்காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் 07 சொத்துக்கள் மற்றும் 02 வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

சபைக்குச் சொந்தமான ஆதனமாக பெயர்ப்பலகை மூலம் காட்சிப்படுத்தப்படாமை, சபைக்குரிய கிணறு அனுமதியற்ற வகையில் நிரப்பப்பட்டு உரிய காணிகளைப் பிடித்து வைத்துள்ள தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை, எல்லையினைக் குறிப்பிட்டு கம்பி அடித்து ஆதனங்களைத் தனியாக இனங்காணக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிராமை போன்ற செயற்பாடுகளினால் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை**

(அ) வாகனத் தளத்திலும் பிரதான அலுவலக வளவிலும் துருப்பிடித்த நிலையில் நீண்ட காலம் முதல் காணப்படுகின்ற 03 உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு முச்சக்கர வண்டி என்பவற்றை சரியான பிரகாரம் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிரிபத்கொட கூட்டுறவு வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள பொதுக் கிணறு, ஹுணுபிட்டிய காந்தி மாவத்தையில் உள்ள கிணறு உட்பட மீள்நிர்மாணம் செய்யக்கூடிய நிலையில் உள்ள கிணறுகள் மீளமைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.4 கையேற்கப்படாத சொத்துக்கள்**

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 112 ஆதனங்களில் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய அளவிடை செய்யப்பட்ட உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை

என்பன பெறப்படாதிருந்த மற்றும் ஆதனங்களின் உரித்தை தீர்த்து உரித்துறுதி தயாரிக்கப்படாதிருந்த ஆதனங்களின் எண்ணிக்கை 52 ஆகும்.

### 3.5.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2016 நவம்பர் 11 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த ரூபா 32 மில்லியன் பெறுமதியான பாச் இயந்திரம் அத்திகதி முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி அமைச்சின் மூலம் 2014 நவம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்ட 423 கல்வனைஸ் குழாய்கள் 2017 யூன் 06 வரையிலும் குறைவான பயன்பாட்டுடனான நிலையில் காணப்பட்டது.

### 3.6 பெறுகைகள்

**வருடாந்த பெறுகைத் திட்டம்**

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மைச் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 4.2.1(b) மற்றும் (c) இன் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் விபரங்களுடன் வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் 19 இலக்குகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,872,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) நாளதுவரையாக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை |
| | (ii) நிலுவை வருமானம் சேகரித்தல் மந்த நிலையில் காணப்பட்டமை. |
| | (iii) புதிய வருமான மூலங்கள் கண்டறியப்பட்டு வருமானம் சேகரிக்கப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | மிகை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமை |
| | | (iii) | நிதிஏற்பாட்டின் குறைந்த பயன்பாடு |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | உரித்துறுதி பெறப்படாமை |
| | | (ii) | சொத்துக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படாமை |
| | | (iii) | கிரயம் தொடர்பான தகவல்கள் இன்றி நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படாமை |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் சேகரித்தல், அகற்றுதல் மற்றும் கூட்டுப்பசளை தயாரித்தல் தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தப்படாமை |
| | | (ii) | கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ஏற்படுகின்ற அதிக செலவினம் கட்டுப்படுத்தப்படாமை |